2022 மே 6] [திரு. துரைமுருகன்]

உறுப்பினர்களே அடுத்த குழு தேர்ந்தெடுக்கப்படும் வரையிலும் மற்றும் பேரவை விதி 231(2)-ஐ தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரையில் பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31-3-2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

அவை உரிமைக் குழு மற்றும் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

(ஆ) பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (7-5-2022) சனிக்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (7-5-2022) சனிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (7–5–2022) சனிக்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (7–5–2022) சனிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

86. தமிழ்நாடு 2022 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிகள் (மேல்முறையீடு) விதிகளை இயற்றியது குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நல(வே.உ.5)த் துறையின் 15–2–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 29–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 46/1968) 37(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

87. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

88. 2020–2021 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)